மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்
முன்னிலை:திரு.ஆர்.மணிவர்மன், பி.ஏ., பி.எல்., எல்.எல்.எம்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, மேட்டூர்
2024 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 04 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை
இ.ம.எண்.04/2023
அ.வ.எண்.186/2023

1. R.சுப்ரமணியம்
2. N.வெங்கடாச்சலம்
3. C.N.குமார் ... மனுதாரர்கள்/வாதிகள்

/எதிராக/

1. உதவி ஆணையாளர்,
HR & CE, சேலம் –1
2. செயல் அலுவலர்
அருள்மிகு ஸ்ரீ லட்சுமி நரசிம்மர் சுவாமி மற்றும்
அருள்மிகு ஸ்ரீ சோமேஸ்வரர் சுவாமி கோவில்
நங்கவள்ளி. ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு கடந்த 25.04.2024 ஆம் தேதியன்று இந்நீதிமன்றம் முன்பாக இறுதியான விசாரணைக்கு வரப்பட்டு மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.P.கோபிநாத் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் அரசு வழக்கறிஞர் திரு.S.ஹரிநாராயணன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரை எமது ஆய்வில் இருந்து வந்து மேற்படி இம்மனுவில் இந்நீதிமன்றம் வழங்கிடும்,

## உத்தரவு

இம்மனுவானது உரிமையியல் நடைமுறைச்சட்டம், கட்டளை 39 விதிகள் 1, 2 மற்றும் பிரிவு 151–ன் கீழ் இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்ட மனுவாகும்.

1) மனுப்பிரமாணப் பத்திரிக்கையின் சுருக்கம் : –

(i) வாதிகள்/மனுதாரர்களால் விளம்புகை, நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரங்கள் கோரி பிரதிவாதிகள்/எதிர்மனுதாரர்களுக்கு எதிராக இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தாவா சொத்துகள் ராமசாமி கவுண்டருக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்டு சுவாதீன அனுபவத்தில் இருந்து வந்த நிலையில், கடந்த 15.02.1996 ம் தேதியிட்ட

பாகப்பிரிவினைப்படி A அட்டவணை சொத்துகள் ராமசாமி கவுண்டருக்கும், B அட்டவணை சொத்துக்கள் 1ம் மனுதாரருக்கும் பாகமாக ஒதுக்கப்பட்டது. இந்நிலையில் ராமசாமி கவுண்டர் தனக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை ஒரு நல்லப்பகவுண்டருக்கு விற்றுவிட்டார். மேற்படி நல்லப்பகவுண்டர் இறந்ததற்கு பின்னிட்டு அவரது வாரிசுகளான 2, 3 மனுதாரர்களுக்கும், 1ம் மனுதாரருக்கும் பாகப்பிரிவினை ஏற்பட்டதின்படி A அட்டவணை சொத்துகள் 1ம் மனுதாரருக்கும், B அட்டவணை சொத்துக்கள் 2ம் மனுதாரருக்கும், C அட்டவணை சொத்துக்கள் 3ம் மனுதாரருக்கும் பாத்தியப்பட்டது.

(ii) மேலும் தாவா D ஷெட்யூல் சொத்தான வனவாசியிலிருந்து நங்கள்ளி செல்லும் பிரதான சாலைக்கு மேற்கே ச.எண்.241ன் தெற்கு பகுதியில் 15 அடி அகலம் மற்றும் 270 அடி நீளம் கொண்ட தென்வடல் வண்டித்தடத்தின் வழியாகத்தான் A முதல் C ஷெட்யூல் நிலங்களுக்கு மனுதாரர்களும், அவர்களது முன்னோர்களும் 30 ஆண்டுகளுக்கும் மேலாக சென்று வருகின்றனர். மேற்படி தடவழியை தவிர மனுதாரர்களின் நிலங்களுக்கு செல்வதற்கு வேறு மாற்றுத்தடவழி ஏதும் இல்லை. இந்நிலையில் அருள்மிகு ஸ்ரீ லட்சுமி நரசிம்மசுவாமி மற்றும் அருள்மிகு ஸ்ரீ சோமேஸ்வரன் சுவாமி கோவிலின் நிர்வாகிகளும், இந்து அறநிலையத்துறை அதிகாரிகளான எதிர்னுதாரர்களின் பராமரிப்பிலும், பொறுப்பிலும் மேற்படி தாவா D ஷெட்யூல் தடவழியானது இருந்து வருகிறது.

(iii) மேற்படி தாவா D ஷெட்யூல் தடவழியை மனுதாரர்களும், மேற்படி கோவில் நிர்வாகத்தினரும் பொதுவாக பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேற்படி தாவா D ஷெட்யூல் தடவழியில் இருபுற எல்லைகளிலும் கற்கரை அமைக்கப்பட்டு, மனுதாரர்களால் தங்களது நிலங்களுக்கு செல்ல பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேலும் மேற்படி தாவா D ஷெட்யூல் தடவழியின் வழியாக நிலத்திற்கடியில் குடிநீர் குழாய்கள் அமைக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் 2ம் எதிர்மனுதாரர் மேற்படி தடவழியை மனுதாரர்கள் பயன்படுத்துவதை ஆட்சேபித்து தடுத்ததோடு, மேற்படி தடவழியை அழிக்கவும் முயற்சித்தார். இது தொடர்பாக 1ம் எதிர்மனுதாரரிடம் புகார் அளித்தும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

(iv) இந்நிலையில் கடந்த 03.10.2023 ம் தேதியில் எதிர்மனுதாரர்கள் தாவா D ஷெட்யூல் தடவழியில் இருபுற எல்லைகளிலும் அமைந்துள்ள கற்கரையின் ஒரு பகுதியை நீக்கியதோடு மேற்படி பொது தடவழியை ஆக்கிரமிக்க முயற்சி செய்தனர். மேலும் மேற்படி கோவில் நிலங்களை குத்தகைக்கு விடவும் நடவடிக்கை மேற்கொண்டு வருவதால் மனுதாரர்கள் எதிர்மனுதாரர்களுக்கு எதிராக இவ்வழக்கை தாக்கல் செய்து அதில் இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி மனுதாரர்கள் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

2) 2ம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டு, 1ம் பிரதிவாதியால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பதிலுரையின் சுருக்கம்:–
(குறிப்பாணையின் பேரில் இப்பதிலுரையை இம்மனுவின் எதிர்மனுதாரர்களால் அவர்களது எதிருரையாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது)

(i) மனு பொய்யானது. சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் செல்லதக்கதல்ல. மனுதாரருக்குள்ள உறவுமுறைகளை பற்றியும், ஆவண பரிமாற்றங்கள், வருவாய் ஆவணங்கள் பற்றியும் மனுதாரர்களே நிரூபிக்க கடமைப்பட்டவர்கள். வழக்கில் உள்ள A முதல் C ஷெட்யூல் சொத்து குறித்து ஏற்பட்ட பத்திரங்கள் அனைத்தும் மனுதாரர்களுக்கும், அவர்களுடைய முன் உரிமையாளர்களுக்குள் ஏற்பட்டுள்ள சங்கதிகளாகும். இதற்கும் எதிர்மனுதாரர்களுக்கும் எவ்வித சம்மந்தமும், தொடர்பும் கிடையாது. மேலும் தாவா D ஷெட்யூல் ச.எண்.241 சொத்து வழியாக தான் A முதல் C ஷெட்யூல் நிலங்களுக்கு 30 ஆண்டுகளுக்கு மேலாக சென்று கொண்டிருப்பதற்கான அடிப்படை ஆதாரங்கள் ஏதுமில்லாமல் வழக்கை தாக்கல் செய்துள்ளனர்.

(ii) இவ்வழக்கு D ஷெட்யூல் சொத்தை பொறுத்து மனுதாரர்கள் எவ்வித உரிமையும் கோர முடியாது. இது நங்கவள்ளி நரசிம்மசுவாமி கோவிலுக்கு பாத்தியப்பட்டு இந்து அறநிலைய துறையின் கட்டுப்பாட்டிலுள்ள சொத்தாகும். இதில் மனுதாரர்கள் குறிப்பிடும் நீள அகலத்திலோ மற்றும் எவ்வித வழிப்பாதையும் செல்லவில்லை. கோவில் நிலத்தின் குத்தகைதாரரை தவிர இச்சொத்தில் யாரும் உள்ளே நுழைவது கிடையாது. மனுதாரர்கள் எந்த மனுவும் எதிர்மனுதாரர்களிடம் கொடுக்காமல் பொய்யான சங்கதிகளை கொண்டு மனுதாரர்கள் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளனர். தாவா D

ஷெட்யூல் ச.எண்.241 சொத்து நங்கவள்ளி நரசிம்மசுவாமி கோவிலுக்கு பாத்தியப்பட்டு இந்து அறநிலைய துறையின் கட்டுப்பாட்டிலுள்ள சொத்தாகும்.

(iii) இச்சொத்தின் மூலம் வரும் வருமானத்தினை கொண்டு கோவிலின் தேவைகளை எதிர்மனுதாரர்கள் பூர்த்தி செய்துவருகின்றனர். இச்சொத்து குறித்து மனுதாரர்கள் குத்தகை சம்மந்தமான நடவடிக்கைகளில் மேற்கொள்ள வேண்டும் என்று எதிர்மனுதாரர்களை அறிவுறுத்த முடியாது. பொதுவாக இந்து அறநிலைய துறை கோவிலுக்கு சொந்தமான நிலங்கள் குறித்து அரசும், மாண்பமை உயர்நீதிமன்றமும் சிறப்பு வழிகாட்டு நெறிமுறைகள் வகுத்து பாதுகாத்து வருகின்றனர். இந்நிலையில் தாவா D ஷெட்யூல் ச.எண்.241 சொத்து நங்கள்ளி நரசிம்மசுவாமி கோவிலுக்கு பாத்தியப்பட்ட நிலத்தில் மனுதாரர்கள் வசதியுரிமையின் அடிப்படையில் கோரும் பரிகாரங்கள் மனுதாரர்களுக்கு கிடைக்கத்தக்கதல்ல. மேலும் கோவிலுக்கு சொந்தமான இச்சொத்தில் மனுதாரர்களோ, அவர்களது முன் விற்பனையாளர்களோ எக்காலத்திலும் பயன்படுத்தியதில்லை.

(iv) வழக்கிற்காக பஞ்சாயத்து பேசியதாகவும், கற்களை கொட்டி அடைத்ததாகவும் கூறுவது பொய்யாகும். எதிர்மனுதாரர்கள் இந்து அறநிலைய துறையின் சட்டத்திற்கு உட்பட்டு தான் செயல்பட முடியுமே தவிர எவ்வித தனிப்பட்ட முறையிலும் செயல்பட முடியாது. செயல்படவும் இல்லை. வழக்குமூலமே இல்லாமல் தாக்கல் செய்யப்பட்ட இவ்வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கதாகும். மனுதாரர்கள் எவ்வித உரிய ஆவணமும் இன்றி தவறான முறையில் எதிர்மனுதாரர்களிடம் பரிகாரம் தேடப்படுகிறது. பிரிவு 80 சிபிசியின்படி வழக்கு தாக்கல் செய்யும் முன் அறிவிப்பு அனுப்பப்பட வேண்டும் என்பது அவசியமானதாகும். எனவே செலவுத் தொகையுடன் இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென எதிர்மனுதாரர்கள் கூறியுள்ளார்கள்.

3) இருதரப்பு கற்றறிந்த வழக்குரைஞர்களின் மதிப்பிற்குரிய வாதங்கள் கேட்கப்பட்டன. மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சியங்கள் சான்றாவணங்கள் எதுவும் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

4) பிரச்சினை :–

இம்மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதே ஆகும்.

5) பிரச்சினைக்கான தீர்வு

(i) மனுதாரர்கள் தரப்பில் A அட்டவணை சொத்துகள் 1ம் மனுதாரருக்கும், B அட்டவணை சொத்துக்கள் 2ம் மனுதாரருக்கும், C அட்டவணை சொத்துக்கள் 3ம் மனுதாரருக்கும் பாத்தியப்பட்டது என்றும், A முதல் C ஷெட்யூல் நிலங்களுக்கு செல்ல தாவா D ஷெட்யூல் தடவழியை மனுதாரர்களும், அவர்களது முன்னோர்களும் 30 ஆண்டுகளுக்கும் மேலாக சென்று வருகின்றனர் என்றும், தாவா D ஷெட்யூல் தடவழியானது மனுதாரர்களும், எதிர்மனுதாரர்களின் கோவிலுக்கும் பொதுவான தடவழி என்றும், இந்நிலையில் எதிர்மனுதாரர்கள் தாவா தடவழியை மனுதாரர்கள் பயன்படுத்துவதை ஆட்சேபித்ததோடு அதை தடுத்தும், மேற்படி தடவழியை அழிக்கவும் முயற்சிப்பதால் மனுதாரர்கள் எதிர்மனுதாரர்களுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி இவ்வழக்கை தாக்கல் செய்து அதில் இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி மனுதாரர்களால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரியவருகிறது.

(ii) எதிர்மனுதாரர்கள் தரப்பில் ச.எண்.241ல் உள்ள தாவா D ஷெட்யூல் சொத்து நங்கள்ளி நரசிம்மசுவாமி கோவிலுக்கு பாத்தியப்பட்ட நிலத்தில் மனுதாரர்கள் வசதியுரிமையின் அடிப்படையில் கோரும் பரிகாரங்கள் மனுதாரர்களுக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றும், மேலும் கோவிலுக்கு சொந்தமான இச்சொத்தில் மனுதாரர்களோ, அவர்களது முன் விற்பனையாளர்களோ எக்காலத்திலும் பயன்படுத்தியதில்லை என்றும், எனவே செலவுத் தொகையுடன் இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென எதிர்மனுதாரர்கள் கூறியுள்ளது தெரிய வருகிறது.

(iii) வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்கையில், வாதிகள்/மனுதாரர்களால் விளம்புகை, நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரங்கள் கோரி பிரதிவாதிகள்/ எதிர்மனுதாரர்களுக்கு எதிராக இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரியவருகிறது. மேலும் தாவா D ஷெட்யூல் தடவழியை தவிர மனுதாரர்களின் நிலங்களுக்கு செல்வதற்கு வேறு மாற்றுத்தடவழி இல்லை எனவும்

தெரிவிக்கப்பட்டுள்ளது தெரியவருகிறது. அதே சமயத்தில் எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாவா D ஷெட்யூல் சொத்தானது கோவிலுக்கு சொந்தமான நிலம் என்றும், அதில் தனி நபர்கள் எவ்வித உரிமையும் கோர இயலாது என்றும், தெரிவிக்கப்பட்டுள்ளது தெரியவருகிறது.

(iv) இச்சூழ்நிலையில் மனுதாரர்கள் தாவாவில் கோரியுள்ள நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரமும், இந்த இடைநிலை மனுவில் கோரப்பட்டுள்ள இடைக்கால உறுத்துக் கட்டளை பரிகாரமும் ஒரே மாதிரியான தன்மை கொண்டதாகவும், ஒத்த இயல்புடையதாகவும் உள்ளது தெரியவருகிறது. எனவே மேற்படி பிரச்சனைகளையும், அதன் தகுதிப்பாடுகளையும் இடைநிலை மனுவில் தீர்மானிப்பது என்பது ஒரு சிறிய வழக்கு விசாரணை நடத்துவதற்கு ஒப்பானதாக இந்நீதிமன்றம் கருதுகிறது.

(v) மேலும் இவ்வழக்கின் சங்கதிகள் மற்றும் சூழ்நிலைகளையும், தரப்பினர்களது வாதங்களையும் கருத்தில் கொள்கையில் இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரதான பிரச்சனையானது, மனுதாரர்கள் கூறுவதுபோல் தாவா D ஷெட்யூல் சொத்தில் தடவழி அமைந்துள்ளதா? என்பதும், மேற்படி தடவழியை மனுதாரர்கள் சுமார் 30 ஆண்டுகளுக்கு மேலாக பயன்படுத்தி வருகின்றனரா? என்பதும், தாவா தடவழியில் தவிர மனுதாரர்களுக்கு வேறு மாற்றுத்தடவழி ஏதும் இல்லையா? என்பதும், தாவா தடவழியை பொறுத்து மனுதாரர்களுக்கு இன்றியமையா மற்றும் நீடனுபோக வசதியுரிமை உள்ளதா? என்பதும், மேற்படி தாவா தடவழியை எதிர்மனுதாரர்கள் அழிக்க முயற்சி செய்தனரா? என்பதுமே ஆகும்.

(vi) மேற்படி சங்கதிகள் மற்றும் பிரச்சனைகள் குறித்து தரப்பினர்கள் முன் வைக்கும் சாட்சியங்களின் அடிப்படையிலேயே அவற்றை தீர்மானிக்க இயலும். மேலும் இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனையானது சங்கதி தொடர்புடைய எழுவினாவாக உள்ளது என தெரியவருகிறது. இவ்வழக்கானது பதிலுரை தாக்கல் செய்யப்பட்டு, எழுவினாக்கள் வனையப்பட்டு, விசாரணைக்காக தயார் நிலையில் உள்ளதை கருத்தில் கொள்கையில், மேற்படி எழுவினாவை வழக்கு விசாரணையின் பொழுது தரப்பினர்களால் முன்னிலைப்படுத்தப்படும் வாய்மொழி மற்றும் ஆவண

சாட்சியங்களின் அடிப்படையிலேயே தீர்மானிக்க இயலும் எனவும் இந்நீதிமன்றம் கருதுகிறது.

(vii) மாண்பமை உச்சநீதிமன்றத்தால் "*Anand Prasad Agarwalla /Vs/ Tarkeshwar Prasad & Ors", reported in "2001 (5) SCC 568"* என்ற வழக்கில்,

> *"It may not be appropriate for any Court to hold mini trial at the stage of grant of temporary injunction."*

என்ற சட்டநிலைப்பாடு வகுத்துரைக்கப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட சட்ட நிலைப்பாட்டின் அடிப்படையில் மனுதாரர்களால் காண்பிக்கப்பட்டுள்ள முதல் தோற்ற வழக்கானது இருதரப்பு ஆவணங்களின் அடிப்படையில் வழக்கு விசாரணையின் மூலம் தான் தீர்மானிக்க இயலும் என இந்நீதிமன்றம் கருதுகிறது. இச்சூழ்நிலையில் மாண்பமை உச்சநீதிமன்றம் மேற்கண்ட வழக்கில் கூறியுள்ளபடி, இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்க ஒரு சிறிய வழக்கு விசாரணை நடத்த வேண்டிய அவசியமில்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே இம்மனு தள்ளுபடி செய்யத்தக்கது என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

முடிவாக, இம்மனு செலவுத்தொகையின்றி தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2024 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 04 ஆம் நாள் இந்த திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

R MANIVARMAN

Digitally signed by R MANIVARMAN
Date: 2024.06.04 16:15:31 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.

<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் :– இல்லை</u>

<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் :– இல்லை</u>

R MANIVARMAN
Digitally signed by R MANIVARMAN
Date: 2024.06.04 16:15:38 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.